**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No. 280/2013**

**Prosecution Witness : 3**

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : சில்வியா ஜாஸ்மின் | **Caste** | : | |
| **Father's Name** | : ஆரோக்கியசாமி | **Calling** | : | காவல் ஆய்வாளர் |
| **Village** | : சின்னாளப்பட்டி | **Religion** | : | |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : | **46/2026** |
| | | **Dated** | : | **17.08.2026** |

**17.08.2026 (V.C)**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 1 **திருமதி.சில்வியா ஜாஸ்மின்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 3** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1 முதல் 5 எதிரிகள் ஆஜர் இல்லை . U/s.355 of petition filed and allowed.**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் தற்போது சமயநல்லூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 2013ம் ஆண்டு திண்டுக்கல் மாவட்டம் தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது கடந்த 10.02.2013ம் தேதி இரவு 00.30 மணியளவில் திண்டுக்கல் பாலகிருஷ்ணாபுரத்தை சேர்ந்த துர்க்கா தேவி என்பவர் வீட்டில் இருந்தபோது அவரின் கணவர் வந்தார்.

கணவர் மற்றும் அவரின் குடும்பத்தாருடன் வந்து தகராறு செய்ததாக கொடுத்த புகாரினைப்பெற்று திண்டுக்கல் தாலுகா காவல் நிலைய குற்ற எண்.77/2013 சட்டப்பிரிவு 147,294(b),448,427,323,506(ii) IPC ஆக வழக்கு பதிவு செய்தேன். மேற்பட்ட எதிரிகள் நீதிமன்ற முன்பிணைப்பெற்று 01.03.2013 முதல் திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் தினமும் காலை 10.00 மணிக்கு கையொப்பம் போட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது, 02.03.2013 அன்று காலை 9.35 மணிக்கு நான் நிலையத்தில் இருந்தபோது மேற்படி எதிரிகள் ஜாமின் கையொப்பம் போட வந்தார்கள் . நான் அவர்களை பார்த்து 10.00 மணிக்கு தான் கையொப்பம் இட வரவேண்டும் ஏன் முன்கூட்டியே வருகிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு பொன்ராஜ், அவரது மனைவி அஷ்டலெட்சுமி நீ எப்படி எங்கள் மீது FIR போடலாம் என்று ஒருமையில் பேசினார்கள்.

பிற எதிரிகளான அருண் குமார், தினேஷ் குமார், அ்க்கம்மா ஆகியோர்கள் பெரிய அதிகாரியல்லாம் இருங்கிறார்கள். எங்கள் மீது FIR போட்டவிவரம் தெரிந்தால் உன்னை தொலைத்துக்கட்டிவிடுவார்கள் என்று மிரட்டி எனது அரசுப்பணியைத் தடுத்தார்கள். நான் உடனே வெளியே போங்க என்று துரத்தினேன். அப்போது பொன்ராஜ் வாசலில் நின்று நீ வெளியே வா உன்னை என்ன செய்கிறேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார். அப்போது நிலையத்தில் இருந்த சார்பு ஆய்வாளர் மனோகரன் , கந்தசாமி, செல்வம், மஞ்சுளா, அழகம்மாள் ஆகிய காவலர்கள் அருகில் வந்து எதிரிகளை அனுப்பிவைத்தார்கள். மேற்படி சம்பவம் குறித்து திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார். புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

தாலுகா காவல் நிலையத்தில் நான் எந்த காலம் முதல் எந்த காலம் வரை பணியாற்றினேன் என்றால் 2012 செப்டம்பர் முதல் 2013 மே வரை பணியாற்றினேன் என்றால் சரிதான். தாலுகா காவல் நிலையம் ரவுண்ட் ரோட்டின் பகுதியில் அமைந்துள்ளது என்றால் சரிதான். தாலுகா காவல் நிலைய அறைகளை ரோட்டின் வெளிப்பகுதியில் இருந்து பார்த்தாலே தெரியும் என்றால் சரிதான். தாலுகா காவல் நிலையம் 5 அறை கொண்டது என்றால் சரிதான். அன்றைய தேதியில் 3 சார்பு ஆய்வாளர்கள் பணியில் இருந்தார்கள் என்றால் சரிதான். எனக்கு ஒதுக்கப்பட்ட அறை இடது புறத்தில் காவல் ஆய்வாளர் அறைக்கு அருகில் இருந்த அறை என்றால் சரிதான். ஆனால் நான் சம்பவத்தின் போது ஹாலில் தான் இருந்தேன்.

இவ்வழக்கின் துர்க்காதேவி, ராஜன் ஆகியோர் மீது தொடுக்கப்பட்ட குற்ற எண்.77/2013 ன் முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்ற இறுதி அறிக்கை அல்லது மேற்படி எதிரிகளுக்கு அளித்த முன்பிணை உத்தரவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிகள் கையொப்பம் செய்ய வந்ததாக சொல்லப்படும் மேற்படி எதிரிகளின் நோட்டுகளை எனது சார்பு ஆய்வாளர் விசாரணையில் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் புகாரை நான் எழுத்துப்பூர்வமாக கொடுத்தேன் என்றால் சரிதான். மதியம் 3.00 மணியளவில் 02.03.2013அன்று கொடுத்தேன் என்றால் சரிதான். அன்றைய தேதியில் பணிபுரிந்த 1 முதல் 6 வரையிலான பட்டியல் சாட்சிகள் எனது காவல் நிலைய காவலர்கள் என்றால் சரிதான்.

அன்றைய தினத்தில் தனிநபர் சாட்சிகள் ஏதும் இல்லை என்றால் சரிதான். மேற்படி சம்பவம் குறித்து எந்த உயர் அதிகாரியிடம் நான் கொடுத்தேன் என்ற விவரத்தை எனது வாக்குமூலத்திலோ அல்லது நீதிமன்ற சாட்சியிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். காவல் நிலையம் அருகில் உள்ள டவர்ன் CCTV கேமரா மூலம் அனைத்து சம்பவங்களையும் பார்க்கலாம் என்றால் சரிதான். நபர்கள் கூட்டமாக வந்தது குறித்து எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் வீடியோ ஆதாரம் ஏதும் எந்த இடம் என்று தனியாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரிகள் யார் யார் எந்த இடத்தில் இருந்து என்ன என்ன ஆபாச வார்த்தைகள் பேசினார்கள் என்றும் எனது புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே எனக்கும் எதிரி துர்க்காதேவிக்கும் இருந்த முன்விரோதம் காரணமாக புகார் அளித்தேன் என்றால் சரியல்ல. எனது காவல் நிலையத்திற்கும் நகர் வடக்கு காவல் நிலையத்திற்கும் சுமார் 1 கி.மீ இருக்கும் என்றால் சரிதான்.

உண்மையிலேயே சம்பவம் நடந்திருந்தால் சம்பவம் நடந்த உடனே நான் புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. எனது புகாரை மடிக்கணிணி மூலமாக பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் அன்று பணியில் இருந்ததற்கான GD Entry ஆவணம் ஏதும் புலன்விசாரணை அதிகாரியிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல . நான் சொன்ன நாள் நேரத்தில் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும் பின்னிட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

**இல்லை**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.08.17 09:33:54 +0530

Judicial Magistrate No.II
Dindigul.